# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,
## இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


2025, ஓகத்து மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 20.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 31/2022

### (436 ஆம் அத்தியாயம் ) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக: -

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் "கட்டுப்பாட்டாளர்" மற்றும் "இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் எந்தெந்த இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்கள் காணப்படுகின்றதோ அந்தந்த இடங்களிலெல்லாம் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

436 ஆம் அத்தியா யத்திற்கான பொதுவான திருத்தம்

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில் தொடர்பாடலில் படிவத்தில், வேறு சாதனத்தில் அல்லது ஆவணத்தில் 'கட்டுப்பாட்டாளர்" மற்றும் "இறப்பர்க் கட்டுப்பாட்டாளர்" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் "இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு" செய்யப்பட்ட குறிப்பீடு ஒன்றாக வாசித்து பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 26 ஆம் பிரிவை நீக்குதல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VI இலுள்ள தலையங்கத்தை மாற்றீடு செய்தல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் "பாகம் VI" இலுள்ள சொல்லையும் எண்களையும் உடனடுத்துக் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்படுகிறது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது:-

"இறப்பர் மதியுரைச் சபை".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36, 37, 38, 39, 39அ மற்றும் 50 என்னும் பிரிவுகளை நீக்குதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36, 37, 38, 39, 39அ மற்றும் 50 ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது "கட்டுப்பாட்டாளர்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணம் இடப்படுகின்றது:-

""பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது இச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்